# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

www.dhinathdhalam.com

நடுநிலை நாளிதழ்

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 185 | வியாழக்கிழமை Thursday | 01.10.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தவே அரசியலுக்கு வந்துள்ளோம்



## தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதலமைச்சர் விஜய் பிரசாரம்

தாராபுரத்தில் வருகிற 6-ம் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது. தாராபுரம் தொகுதியில் போட்டியிடும் த.வெ.க. வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து முதல்-அமைச்சர் விஜய் இன்று பிரசாரம் செய்தார்.

பொதுக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் தாராபுரம் தொகுதி மக்கள் அனைவருக்கும் வணக்கம்.. வணக்கம்... வணக்கம்... கொங்கு நாட்டு தங்கங்களே... கொங்கு நாட்டு சிங்கங்களே... என் சொந்தங்களே.. இங்கு நான் முதல்- அமைச்சராக வரவில்லை; உங்கள் வீட்டு பிள்ளையாக... உறவாக.. மகனாக... தாய்மாமனாக வந்துள்ளேன். ஊழல் ஒழிப்பில் முனைப்போடு உள்ளோம். வாக்குறுதிகளிகளை படிப்படியாக நிறைவேற்றி வருகிறோம்.

இன்னும் நாங்கள் தான் முதல்-அமைச்சர், நாம் தான் அதிகாரத்தில் இருக்கிறோம் என சிலர் நினைக்கின்றனர். இன்னும் நாங்கள் தான் மன்னராட்சி மனப்பான்மை எனக்கு இல்லை. தீய சக்தி திமுகவுடன் அதிமுக மறைமுக கூட்டணி. தீய சக்தி திமுகவின் பினாமிபோல் சுய நலமாக சுற்றுபவர்கள் நாம் கிடையாது. மக்களின் நம்பிக்கையை காப்பாற்றுவோம். மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்தவே அரசியலுக்கு வந்துள்ளோம்.

கடவுள் நம்பிக்கை எங்களுக்கு உண்டு, யாருடைய கடவுள் நம்பிக்கைக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல. கிருஷ்ண ஜெயந்திக்கும், கிறிஸ்துமசுக்கும், பக்ரீத்துக்கும் நாங்கள் வாழ்த்து சொல்வோம். மற்றவர்கள் போல் வெளி வேஷம் போட்டுக் கொண்டு பம்மிக் கொண்டு திமுக போல் இருக்க மாட்டோம். அண்ணா காலத்தில் எளியவர்களை நிறுத்தி மன்னர்களை தோற்கடித்ததாக திமுகவின் துரைமுருகன் பேசுகிறார். துரைமுருகன் கூறியதுபோல் எளியவர்களை நிறுத்தி தான் மன்னர்களை தோற்கடித்தது தவெக.

கொளத்தூர் மக்களுக்கு கையெடுத்து கும்பிட்டு கோடான கோடி நன்றி எனக் கூறுகிறார் மு.க.ஸ்டாலின். திமுக ஆட்சியில் நிறைய தவறுகள் நடந்திருக்கிறது, அதனால் தான் கொளத்தூரில் ஒட்டு போடவில்லை. இனி ஒவ்வொரு தேர்தலிலும் ஸ்டாலின் கோடான கோடி நன்றி எனக் கூறிக் கொண்டேதான் இருக்க வேண்டும். மு.க.ஸ்டாலின் அவன், இவன் என ஒருமையில் பேசுகிறார், நான் பாசமாக பேசுகிறேன். ஆபாச நதி, வன்மநதியை வளர்த்து வைத்திருக்கிறார் ஸ்டாலின், நீங்கள் பேசப் பேச நாங்கள் உயர்வோம். தரம் தாழ்த்தி பேசப் பேச தவெக உயர்ந்து கொண்டே இருக்கும்.

### முதலமைச்சர் விஜய் முன்னிலையில் தவெகவில் செம்மலை ஐக்கியம்



தாராபுரம்: அதிமுக முன்னாள் அமைச்சரான செம்மலை, தாராபுரத்தில் நடக்கும் பொதுக் கூட்டத் திடலில் முதல்வர் விஜய் முன்னிலையில் தவெகவில் இணைந்தார்.

தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெறும் திடலுக்கு வந்து சேர்ந்த முதல்வர் விஜய்யை, தவெக கட்சித் துண்டுடன் அதிமுக முன்னாள் அமைச்சரான செம்மலை வரவேற்றார். செம்மலை கொண்டுவந்த கட்சித் துண்டை வாங்கி, அவரின் கழுத்தில் போட்டு கட்சியில் சேர்த்துக் கொண்டார் முதல்வர் விஜய். கடந்த சில நாட்களாகவே அதிமுக தலைமை மீது அதிருப்தியில் உள்ள செம்மலை தவெகவில் இணைவதாக பேச்சு எழுந்தது. இந்தச் சூழலில், அவர் இன்று தவெக பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெறும்திடலுக்குவருகை தந்து அமைச்சர்களுடன் உரையாடிக் கொண்டிருந்தார். அதனைத் தொடர்ந்து முதல்வர் விஜய் முன்னிலையில் தவெகவில் அவர் இணைந்துள்ளார்.

# த.வெ.க. கூட்டணியில் ஐக்கியமாகிறது பா.ம.க. சவுமியா அன்புமணி அமைச்சராக வாய்ப்பு?



த.வெ.க. கூட்டணியில் பா.ம.க. இணைய உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால்,சவுமியாஅன்புமணி அமைச்சராக வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

தமிழகத்தில் கடந்த ஏப்ரல் மாதம் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடத்தப்பட்டு, மே மாதம் 4-ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. தேர்தலில், தி.மு.க. கூட்டணி, அ.தி.மு.க. கூட்டணி, த.வெ.க., நாம் தமிழர் கட்சி இடையே 4 முனைப்போட்டி நிலவினாலும், எந்த கட்சிக்கும் ஆட்சியமைக்க தேவையான 118 தொகுதிகள் கிடைக்கவில்லை.

இதனால், அதிக தொகுதிகளில் வெற்றி பெற்ற த.வெ.க. (107 இடங்கள்) கூட்டணி ஆட்சி அமைத்தது. த.வெ.க.வுக்கு தி.மு.க. கூட்டணியில் இருந்த காங்கிரஸ் (5), இந்திய கம்யூனிஸ்டு கட்சி (2), மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (2), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (2) ஆகிய கட்சிகள் ஆதரவு அளித்தன.

### இடைத்தேர்தல்வெற்றி அவசியம்

இந்த நிலையில், தமிழகத்தில் காலியாக உள்ள 7 சட்டசபை தொகுதிகளில் மதுராந்தகம், தாராபுரம் ஆகிய 2 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் (அக்டோபர்) 6-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த 2 தொகுதிகளில் ஆளுங்கட்சியான த.வெ.க வெற்றி பெற்றாலும் அக்கட்சிக்கு சட்டசபையில் பலம் 109 ஆகத்தான் உயரும்.அப்படியானால், இடைத்தேர்தலுக்கு காத்திருக்கும் 5 தொகுதிகளில் த.வெ.க. வெற்றி பெறுவதுடன் மேலும் 4 இடங்கள் அவசியம் தேவைப்படுகிறது.

### பா.ம.க.ஆதரவுஅளிக்க முடிவு

ஏற்கனவே, ஆட்சிக்கு ஆதரவு அளித்த இரு கம்யூனிஸ்டு கட்சிகள், த.வெ.க. கூட்டணியில் இல்லை என்று அறிவித்துவிட்டன. இடைத்தேர்தலையும் இரு கம்யூனிஸ்டு கட்சிகள் தனியாக சந்திப்பதால், எந்த நேரத்திலும் த.வெ.க. அரசுக்கான ஆதரவை விளக்கிக் கொள்ளும் அபாயம் இருக்கிறது.

இப்படி கடும் நெருக்கடிக்கு மத்தியில் த.வெ.க. சிக்கித் தவிக்கும் நிலையில், அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியில் உள்ள பா.ம.க. (4) ஆதரவு அளிக்க முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

### இடைத்தேர்தலுக்கு பிறகு அமைச்சரவை மாற்றம்

ஆரம்பத்தில் த.வெ.க. அரசை கடுமையாக விமர்சித்து வந்த பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ், அதன்பிறகு சற்று அமைதியான போக்கையே கடைபிடித்து வருகிறார். இது த.வெ.க. - பா.ம.க. கூட்டணியை உறுதி செய்வதாகவே தெரிகிறது.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு பிறகு த.வெ.க. அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட உள்ளது. சில அமைச்சர்கள் நீக்கப்படுவதோடு, சில அமைச்சர்களின் இலாகாக்கள் மாற்றியமைக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்குள் த.வெ.க. கூட்டணிக்குள் பா.ம.க. வந்தால், அக்கட்சிக்கும் அமைச்சரவையில் ஒரு இடம் வழங்கப்படும் என்றுதெரிகிறது.இதற்கு முதல்-அமைச்சர் விஜய்யும் பச்சை கொடி காட்டிவிட்டார் என்று கூறப்படுகிறது.

### அமைச்சராகிறார், சவுமியா அன்புமணி

த.வெ.க.வுக்கு பா.ம.க. ஆதரவு அளிக்கும் பட்சத்தில், அக்கட்சியின் சட்டமன்றதலைவர் சவுமியா அன்புமணி அமைச்சராக பதவியேற்பார் என்று தெரிகிறது. ஏற்கனவே, கடந்த சட்டசபைகூட்டத்தொடரில், அவரது செயல்பாடு மெச்சும்படி இருந்தது. மக்கள் பிரச்சினைகளை அவர் அவையில் எடுத்துவைத்த விதம் அனைவரது பாராட்டையும் பெற்றது.

சவுமியா அன்புமணிக்கு பள்ளிக் கல்வி, சுற்றுச்சூழல், வனம் ஆகிய 3 துறைகளில் ஏதேனும் ஒரு துறை வழங்கப்படும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளது. ஏற்கனவே, த.வெ.க. அமைச்சரவையில் காங்கிரஸ் (2), விடுதலை சிறுத்தைகள் கட்சி (1), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (1) ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# 10வது தங்கப் பதக்கத்தை வென்ற இந்தியா; பதக்கப் பட்டியலில் 7வது இடத்திற்கு முன்னேற்றம்





வில்வித்தையில் 3-வது தங்கம் வென்று இந்தியா வரலாறுபடைத்துள்ளது.

ஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் உள்ள நகோயா நகரில் 20-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் இந்திய வீரர், வீராங்கனைகள் பல்வேறு விளையாட்டுகளில் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி தொடர்ந்து பதக்கங்களை வென்று வருகின்றனர். இதில் காம்பவுண்ட் வில்வித்தையின் ஆண்கள் அணிப் பிரிவு இறுதிப்போட்டியில் இந்திய அணி சீனாவை எதிர்கொண்டது. பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் இந்திய அணி 238-237 என்ற புள்ளிக் கணக்கில் ஒரே ஒரு புள்ளி வித்தியாசத்தில் சீனாவை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை கைப்பற்றியது. இந்திய அணியில் இடம்பெற்றசாஹில், கணேஷ் மற்றும் குஷால் ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு அணியின் வெற்றிக்கு முக்கிய பங்காற்றினர்.

இதன் மூலம் இன்று நடந்தகாம்பவுண்ட்வில்வித்தையில் மூன்று பிரிவுகளிலும் தங்கப் பதக்கங்களை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மகளிர் அணி - தங்கம்

கலப்பு இரட்டையர் அணி - தங்கம்

காம்பவுண்ட் வில்வித்தையின் மூன்று பிரிவுகளிலும் தங்கம் வென்று இந்தியா சாதனைபடைத்துள்ளது.

முன்னதாக நடைபெற்ற டிராப் கலப்பு இரட்டையர் (Trap Mixed Team) துப்பாக்கி சுடுதல் பிரிவில் இந்தியாவின் நீரு தண்டா மற்றும் கைனன் செனாய் இணை தங்கப் பதக்கம் வென்று அசத்தியது.

இதன் மூலம் இன்றைய தினத்தில் காம்பவுண்ட் வில்வித்தையில் மூன்று தங்கங்களையும், துப்பாக்கி சுடுதலில் ஒரு தங்கத்தையும் வென்று இந்தியா வரலாறு படைத்துள்ளது.

இதன் மூலம், 2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் இந்தியா 7வது இடத்திற்கு கம்பீரமாக முன்னேறியுள்ளது. 10 தங்கம், 21 வெள்ளி மற்றும் 28 வெண்கலம் என மொத்தம் 59 பதக்கங்களை இந்தியா இதுவரை வென்றுள்ளது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# விடுமுறையில் வாசிக்க மாணவர்களுக்கு புத்தகங்கள் படித்ததை கூறுவோருக்கு பரிசு



தேவகோட்டை:
சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்தும் வகையில், முதல் பருவ விடுமுறையை பயனுள்ளதாக பயன்படுத்த பள்ளியின் சார்பில் மாணவர்களுக்கு தலா நான்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம், விடுமுறை நாட்களில் மாணவர்கள் புத்தகங்கள் மற்றும் நூலகங்களைப் பயன்படுத்தி அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும், விடுமுறை முடிந்துபள்ளிதிறந்ததும் மாணவர்கள் படித்த புத்தகங்கள் குறித்து கேள்விகள் கேட்கப்பட்டு, சிறப்பாக பதிலளிப்பவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும் என தெரிவித்தார்.

புத்தகங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை ஆசிரியர்கள் ஸ்ரீதர், சிவரஞ்சனி, ஆர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

# தாகூர் பொறியியல் கல்லூரியில் தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம் – டெக்ஃபெஸ்ட் 2026




சென்னை அடுத்த ரத்தினமங்கலத்தில் உள்ள தாகூர் பொறியியல் கல்லூரியில் டெக்ஃபெஸ்ட்-2026 என்ற தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கம் நடைபெற்றது.

தாகூர் பொறியியல் கல்லூரி நிர்வாகம், முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, கல்லூரியின் டெக் கலையரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நாகூர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் மற்றும் நிர்வாக அறங்காவலர் பேராசிரியர் டாக்டர் எம். மாலா தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ADF Applied Data Finance நிறுவனத்தின் நிர்வாக துணைத் தலைவர் திரு. விஜயகுமார் மதியழகன் கலந்து கொண்டு தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு தொடர்பான கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

மேலும், தாகூர் கல்வி அறக்கட்டளை உறுப்பினர் செல்வி ரக்ஷனா, செயலாளர் திரு. ஜி. மணிகண்டன், முதல்வர் டாக்டர் எஸ். நாகராஜன் உள்ளிட்ட நிர்வாகிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய அளவில் நடைபெற்ற இந்த தொழில்நுட்பக் கருத்தரங்கில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் பங்கேற்றனர். மொத்தம் 946 மாணவர்கள் பல்வேறு தொழில்நுட்பப் போட்டிகளில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் தொழில்நுட்ப திறன், புதுமையான சிந்தனை மற்றும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட நவீன தொழில்நுட்ப அறிவை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டிகளின் முடிவில் சாய்ராம் கல்லூரி மாணவர்கள் சாம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சார்பில் பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. திறமைகளை வெளிக்கொண்டு வருவதுடன், பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களை ஒருங்கிணைக்கும் வகையில் நடைபெற்ற டெக்ஃபெஸ்ட்-2026 நிகழ்ச்சி சிறப்பாக நிறைவடைந்தது.

# விவசாயிகள் தொழிலாளர் கட்சி தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு மாநிலத் தலைவர் பொன்குமார் அறிவிப்பு



செங்கல்பட்டு மாவட்டம் 20 ஆண்டுகாலம் திராவிட முன்னேற்ற கழக தலைமையிலான கூட்டணியில் என்னுடைய தலைமையிலான விவசாயிகள் தொழிலாளர் கட்சி மற்றும் கட்டிடத்துல்லா மத்திய சங்கம் விசுவாசம் உள்ள நம்பிக்கைஉள்ளகூட்டணியாக செயல்பட்டு வந்தது அந்த அணியின் வெற்றிக்காக தொடர்ந்து பல்வேறு தேர்தலை பணியாற்றி இருந்தோம் தலைவர் கலைஞர் அவர்கள் இருந்தபோது எங்களுக்கு கொடுத்த அங்கீகாரம் கலைஞருக்கு பின்னான திராவிட முன்னேற்றக் கழக தலைமையால் அது குறிப்பாக 2021 26 சட்டப்பேரவை தேர்தலில் எங்களுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளித்த மறுக்கப்பட்டது கூட்டணியில் இல்லாதவர்களை எல்லாம் எந்த கட்சியின் தெரியாதவர்கள் எல்லாம் வீடு தேடி போய் முடிச்சு அவர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுத்த திமுக தலைமைக்கு 20 ஆண்டு காலம் திமுகவை நெஞ்சிலும் தோளிலும் சுமந்த விவசாயிகள் தொழிலாளர் கட்சிக்கு இடம் அளிக்கவில்லை.

கடந்த தேர்தல்ல எஸ்டிபி கட்சி திமுக இல்லை கருணாஸ் அவர்கள் என்னகட்சிஎங்கஇருக்கு ஆனால் 20 ஆண்டு காலம் பத்தாண்டு காலம் திமுகவுக்காக அந்த அடியில் இருந்தும் இப்படி உரிய அங்கீகாரம் மரியாதை தரப்படாத காரணத்தினால் அந்த அணியில் இருந்து விலகி இன்றைக்கு தமிழ்நாட்டுடைய முதலமைச்சர் தலைமையில் உள்ள மதசார்பற்ற சமூகம் தொழிலாளர் கட்சி இந்த கட்சியினுடைய பொதுச் செயலாளர் தொழிலாளர் கட்சியும் இந்த தொகுதிகளில் உள்ள தொழிலாளர்கள் குறிப்பாக கட்டுமான தொழிலாளர்களும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கிறோம்.

இவ்வாறு செய்தியாளர்களிடம் கூறினார்

கடந்த கல்வியாண்டில் மாநகராட்சி பள்ளியில், மாணவர்கள் 100 சதவிகிதம் தேர்ச்சி அடைவதற்கு

# மாணவர்களுக்கு பக்க பலமாக நின்ற ஆசிரியர்களை பெருமைப்படுத்தும் வகையில், ஜூவல் ஒன் நிறுவனத்தின் சார்பாக நடைபெற்ற ஆசிரியர்களை பாராட்டும் விழா



கடந்த கல்வியாண்டில் தங்களது மாணவர்களை, 100 சதவிகிதம் தேர்ச்சி பெற, அயராது பாடுபட்டு கடின உழைப்பை வழங்கிய ஆசிரியர்களை பெருமை படுத்தும் வகையில், கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள, தனியார் கல்லூரி வளாகத்தில், ஜூவல் ஒன் நிறுவனத்தின் சார்பாக, அரசு மாநகராட்சி பள்ளி ஆசிரியர்களுக்கு நன்றி கூறும் நிகழ்ச்சி நடைபெற்றது..

வகுப்பறைகளுக்கு தொடர்ந்து உத்வேகம் அளித்து, கனவுகளை வளர்த்து சமூகங்களின், எதிர்காலத்தை வடிவமைக்கும்ஆசிரியர்களை கொண்டாடும் வகையில், நடைபெற்றஇந்தநிகழ்ச்சியில், சிறப்பு விருந்தினர்களாக கோவை மாவட்ட ஆட்சியர்பவன்குமார்,கோவை மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி கிருஷ்ணபிரியா,மாவட்ட கல்வி அலுவலர்கோமதி,மாநகராட்சி கல்வி அதிகாரி குணசேகரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கி பெருமை படுத்தினர். தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய எமரால்டு ஜூவல் இன்டஸ்டிட்ரி நிறுவனத்தின் தலைவரும்நிர்வாகஇயக்குநருமான சீனிவாசன் கூறியதாவது..

ஜூவல் ஒன் நிறுவனத்தின் சார்பாக நடைபெற்ற ஆசிரியர்களை பெருமை படுத்தும் நிகழ்ச்சியை நடத்தியதில் எங்களது நிறுவனம் பெருமை அடைந்துள்ளது ஆசிரியர்களுக்கு நன்றிகூறும்இந்தவிழாவில் கோவை மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி பள்ளியில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்ற பள்ளிகளை தேர்வு செய்து, அந்த மாணவர்களின் வெற்றிக்கு பின்னால் நின்ற ஆசிரியர்களை மேடைக்கு அழைத்து பெருமை படுத்தினோம். அவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கி,

ஆசிரியர்களின் சேவையை கொண்டாடும் வகையில் இந்த நிகழ்ச்சியை ஜூவல் ஒன் நிறுவனம் முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தார் . ஆசிரியர்களை பெருமை படுத்த வேண்டியது,நமது சமூக பணி, அந்த பணியை சிறப்பாக கொண்டாடியதில் ஆசிரியர்களுடன் ஜூவல்ஒன்நிறுவனமும் பெருமை கொள்கின்றது என்று தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோவை கேபிஆர் கல்லூரியில் நடைபெற்ற போட்டி!



கோவை அரசூர்பகுதியில் உள்ள கேபிஆர் கலை,அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரியின் புத்தாக்கம் மற்றும் திறன் மேம்பாட்டு மையம், சார்பில் ஹேக் 2 இம்பாக்ட் 2026, SIH கட்டம் 2 முன்மாதிரிகளை நெறிபடுத்துதல் மற்றும் மதிப்பீடுசெய்தல்நிகழ்வு நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் பி. கீதா அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் இந்நிகழ்வானது முன்னெடுக்கப்பட்டது.இந்நிகழ்வில் மொத்தம் 45 அணிகள் பங்கேற்றன. ஒவ்வொரு அணியிலும் 6 உறுப்பினர்கள் இடம்பெற்றிருந்தனர். ஸ்மார்ட் இந்தியா கேக்கத்தான் பயணத்தின் ஒரு பகுதியாக, மாணவர்கள் தங்களின் முன்மாதிரிகளையும் அவற்றின் தொழில்நுட்ப அடிப்படையிலான தீர்வுகளை காட்சிப்படுத்தினர். அவற்றினை நடுவர் குழுவினர் மதிப்பாய்வுச் செய்து போட்டியாளர்களை நெறிப்படுத்தினர்.

முதல் பரிசு 15,000 ரூபாயை ஜூரோ விஷன் அணி வென்றது. Mindpluz அணி இரண்டாம் பரிசு 10,000 ரூபாயையும் Metroniqq & Metreqq அணி மூன்றாம் பரிசு 5,000 ரூபாயையும் பெற்றனர்.இந்நிகழ்வில் நடுவர்களாக ரத்தினம் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறைத்தலைவர்முனைவர் கார்த்திகேயன். Innov8EduTech Solutions துணை நிறுவனர் திரு A. முகமது அலி மற்றும் RAMPeXTechnologies நிறுவனர் திரு பிரசாந்த் கருப்பசாமி ஆகியோர் கலந்துக் கொண்டு போட்டியாளர்களை வழிநடத்தினர்.மாணவர்கள் தங்களின் கருதுகோள்களை வெளிப்படுத்தவும் தங்களது ஆய்வினை மேம்படுத்தவும், கல்வி மற்றும் தொழில்துறை வல்லுநர்களிடமிருந்து மதிப்புமிக்க ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களைப் பெறவும் இந்நிகழ்வு சிறந்த தளமாக அமைந்தது.

# நந்தா மருந்தியல் கல்லூரியில் "உலக மருந்தாளுனர் தினம் 2026"



எதிர்காலத்திற்காக ஈரோடு நந்தா மருந்தியல் கல்லூரியில் "ஆரோக்கியமான மருந்தாளுநர்களை வலுப்படுத்துதல்" என்கிற கருப்பொருளின் அடிப்படையில் உலகமருந்தாளுனர்கள் தினம் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் ஈரோடு மாவட்ட அனைத்து பார்மஸி கல்லூரிகளும் இணைந்து நடத்திய இந்நிகழ்ச்சிக்கு இந்திய மருந்தியல் பட்டதாரிகள் சங்கத்தின் அங்கத்தினர்களான ஆர்.நாராயணசாமி, சக்திவேல் ஏகாம்பரம் மற்றும் இளங்கோவன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துக் கொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர். எஸ். நந்தகுமார் பிரதீப் மற்றும் மருந்து ஆய்வாளர் நிஷித் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். முன்னதாக கல்லூரியின் முதல்வர் மருத்துவர் எஸ். செங்கோட்டுவேலு சிறப்பு விருந்தினர் மற்றும் மாணவர்களை வரவேற்று பேசினார்.

பின்னர், கௌரவ விருந்தினர்களாக ஆர். வி.எஸ் பத்மாவதி அம்மாள் பாரமஸி கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். சுந்திரகணபதி மற்றும் சென்னை ராஜலெட்சமி மருத்துவமனையின் மேலாளர் சாலைபஞ்சாசுரம் ஆகியோர் கலந்து கொண்டு மருந்தாளுநர்களின் முக்கியத்துவங்கள் குறித்து பேசினார்கள்.

இதனைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் விழா மலரினை வெளியீடு செய்து சிறப்புரையாற்றினார்கள்.அப்போது கூறுகையில், மருத்துவர்களின் பரிந்துரையின் படி நோயாளிகளுக்கு மருந்துகளை வழங்கி நோயாளிகளின் உடல் நலம் பேணிக்காக்கப்படும் என்று கூறினார்கள். அதுபோல மருத்துவத் துறையில் பணியாற்றிவரும் அனைத்து சுகாதார பணியாளர்களுடன் கல்வி பயிலும் மாணவர்கள் கைகோர்த்து உலகெங்கிலும்ஆரோக்கியத்தினை மேம்படுத்த பாடுபடவேண்டும் என்று வலியுறுத்தினார்

. நிகழ்வின் முடிவில் ஒருங்கிணைப்பாளரும் பேராசிரியருமான முனைவர்டி.பிரபாநன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிறப்பான முறையில் செய்திருந்த முதல்வர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை நந்தா கல்வி நிறுவனங்களின் இணை நிர்வாக அறங்காவலர்எஸ்.திருமூர்த்தி வெகுவாக பாராட்டி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

# நில அளவைக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கக்கூடாது; எஸ்.பி.யிடம் நில உரிமையாளர் அவசர மனு



ராணிப்பேட்டை: கத்தாரிக்குப்பம் கிராமத்தில் உள்ள நிலத்தை அக்டோபர் 1-ம் தேதி வாலாஜா வட்டாட்சியர் அளவீடு செய்ய உள்ள நிலையில், அதற்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கக்கூடாது என வலியுறுத்தி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கே.திருமாறன் அவசர மனு அளித்துள்ளார். கத்தாரிக்குப்பம் கிராம புஞ்சைசர்வே எண்.114/1-ல் சுமார் 50 சென்ட் நிலம் தங்களது குடும்பத்தினர் 60 ஆண்டுகளுக்கும் மேலாக சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், நிலம் தொடர்பாக எதிர்தரப்பினருடன் பிரச்சினை நிலவி வருவதாகவும் மனுவில் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் WP No.35532/2026 வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், நில அளவையின்போது சுவாதீனம் தொடர்பாக தகராறு இருப்பது தெரியவந்தால், வருவாய்த்துறை அதிகாரிகள் உரிமை குறித்து முடிவு செய்யாமல் சம்பந்தப்பட்டவர்கள் சிவில் நீதிமன்றத்தை அணுக வேண்டும் என நீதிமன்ற உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், சார்பு நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ராணிப்பேட்டை மாவட்ட நீதிமன்றத்தில் C.A. S.R. No.2224/2026 மேல்முறையீட்டு நடவடிக்கை நிலுவையில் இருப்பதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, கடந்த 16.09.2026 அன்று நில அளவீட்டுக்கு ஆட்சேபனை தெரிவித்து வாலாஜா வட்டாட்சியரிடம் மனு அளித்ததாகவும், ஏற்கனவே 18.09.2026 அன்று அளவீடு செய்ய திட்டமிடப்பட்டிருந்த நிலையில் அது நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

தற்போது மீண்டும் அக்டோபர் 1-ம் தேதி நிலத்தை அளவீடு செய்ய வருவதாக வாலாஜா வட்டாட்சியர் சார்பில் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த 28.09.2026 அன்று மீண்டும் அவசர ஆட்சேபனை மனு அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

நில அளவீடு தொடர்பாக நீதிமன்ற வழக்கும் மற்றும் சுவாதீனப் பிரச்சினை நிலுவையில் உள்ள நிலையில், ஒருதலைப்பட்சமாக அளவீடு செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டால் சட்டம்-ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும்,அக்டோபர் 1-ம் தேதி நில அளவீடு நடைபெறும்போது தங்களது உயிருக்கும், குடும்பத்தினர் உயிருக்கும் அல்லது நிலத்துக்கும் ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால், அதற்கு சம்பந்தப்பட்ட வருவாய்த்துறை மற்றும் காவல்துறை அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டிய நிலை ஏற்படும் எனவும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

எனவே, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் மற்றும் தாம் அளித்துள்ள ஆட்சேபனை மனுக்களை கருத்தில் கொண்டு, அக்டோபர் 1-ம்தேதி நடைபெறஉள்ள நிலஅளவீட்டுக்குசிப்காட் காவல் நிலையம் மூலம் போலீஸ் பாதுகாப்பு வழங்கக்கூடாது என்றும், உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கே.திருமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# அமாவாசை திதி, தர்ப்பணத்துக்கு அடிப்படை வசதிகள் செய்து தரக்கோரி இந்து மக்கள் கட்சி மனு



வருகின்ற மஹாளய பட்ச அமாவாசை திதியையொட்டி, முன்னோர்களுக்கு திதி மற்றும் தர்ப்பணம் வழங்க ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கோவில் குளங்கள் மற்றும் பாலாற்றங்கரைகளில் கூடவுள்ளனர். திதிதர்ப்பணம் வழங்கும் இடங்களில் பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான மின்விளக்கு, பந்தல், குடிநீர் மற்றும் தூய்மை வசதிகளை செய்து தரக்கோரி, இந்து மக்கள் கட்சி தமிழகம் சார்பில் ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் திருமதி பாக்கியலட்சுமியிடம் மனு வழங்கப்பட்டது.

வேலூர் கோட்டத் தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் மனு வழங்கப்பட்டது. மனுவைப் பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பாக்கியலட்சுமி, சம்பந்தப்பட்ட ஆற்காடு, ராணிப்பேட்டை, வாலாஜா நகராட்சி நிர்வாகங்கள், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, உடனடியாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்.

குறிப்பாக வாலாஜா வன்னிவேடு அகத்தீஸ்வரர் சிவன் கோவில் அருகிலும், ஆற்காடு பாலாற்றங்கரை காரியமேடை அருகிலும் திதி தர்ப்பணம் வழங்க வரும் பொதுமக்களுக்கு தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் பார்த்திபன், ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா கிழக்கு ஒன்றியத்தலைவர் அன்பழகன், மேற்கு ஒன்றியத் தலைவர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், வாலாஜா நகர பொறுப்பாளர் ஸ்ரீனிவாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் கள்ளக்குறிச்சி மந்தவெளி பொதுக்கூட்டம் மேடையில் நேற்று தேசிய முற்போக்கு திராவிட கழகம் பொதுச் செயலாளர் அண்ணியார் அவர்களின் ஆணைக்கிணங்க முப்பெரும் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது இவ்விழா கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் எஸ் எஸ் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது மேலும் இவ்விழாவில் மாவட்ட ,ஒன்றிய ,நகர மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், கேப்டனின் அன்பு தொண்டர்கள் இப்போது கூட்டத்தில் கலந்து கொண்டனர். மேலும் இவ்விழாவில் கலந்து கொண்டவர் களுக்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

## ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர்

# இந்திய அரசின் அலிம்கோ நிறுவனத்தின் மூலம் 115 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24.48 இலட்சம் மதிப்பிலான உதவி உபகரணங்களை வழங்கினார்கள்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய அரசின் அலிம்கோ (ALIMCO Bangalore) நிறுவனத்தின் மூலம் ஏடிஐபி திட்டத்தின் கீழ் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர், கே.இ. பிரகாஷ் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் 115 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24,47,703/- மதிப்பிலான உதவி உபகரணங்களை நேற்று (30.09.2026) வழங்கினார்கள்.

மாற்றுத்திறனாளிகளின் அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகளை எளிதாக்கவும், அவர்களின் சுயசார்பு மற்றும் நடமாட்டத் திறனை மேம்படுத்தவும் தேவையான உதவி உபகரணங்களை வழங்குவதன் மூலம் அரசு தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில் இன்றைய தினம், ஈரோடு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மற்றும் அலிம்கோ நிறுவனத்தின் நிர்வாகத்தின் மூலம், ஈரோடு மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நடுத்தர அளவு ஊன்றுகோல், மோட்டார் பொருத்தப்பட்ட மூன்று சக்கர வாகனம், சிலிக்கான் குஷன், நான்கு கால் ஊன்றுகோல், நடை உதவிக்கருவி, பெரிய மூன்று சக்கர வாகனம், சக்கர நாற்காலி, பெரிய அளவு ஊன்றுகோல், கழிப்பறை வசதியுடன் கூடிய சக்கர நாற்காலி, முழங்கை ஊன்றுகோல், சுகம்யா ஊன்றுகோல், நடைதடி, கற்றல் உதவி உபகரணப் பெட்டி, உயரத்தைச் சரிசெய்யக்கூடிய நடைதடி, காது கேட்கும் கருவி, செயற்கை கை, கால் மற்றும் உடல் ஆதரவு உபகரணங்கள் என 115 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.24,47,703/- மதிப்பிலான 277 எண்ணிக்கையிலான உதவி உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ச.சங்கர்கணேஷ், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பயிற்சி) ம.பிரசாந்த், (இளநிலை மேலாளர், அலிம்கோ, சென்னை) ரிஷப் மெஹ்ரோத்ரா, உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மதுரையில் தமிழ்நாடு அரசு காவல் துறையில் மற்றும் மத்திய, மாநில அரசை கண்டித்து ஓ பி சி, பி சி, எம் பி சி சமூக மக்கள் மீது போடப்படும் போலி பி சி ஆர் வன்கொடுமை சட்டத்தை உரிய விசாரணை நடத்தவும் உண்மைக்கு மாறாக பி சி ஆர் சட்டத்தில் புகார் அளிப்பவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் திருவள்ளுவர் சிலை அருகே நடைபெற்றது இதில் அனைத்து மறவர்நல நல கூட்டமைப்பு பொதுச்செயலாளர், முன்னாள் தடயவியல் துறை இயக்குனர் விஜயகுமார், முக்குலத்தோர் வாழ்வுரிமைக் கட்சி பூவை ஜெயக்குமார் தேவர், மரத்தமிழர் சேனைத்தலைவர் புதுமலர் பிரபாகரன், வெள்ளாளர் முன்னேற்ற கழக தலைவர் அன்னலட்சுமி சகிலா கணேசன், மனிதநேய ஃபார்வட்டு பிளாக் கட்சி தலைவர் அஜித் குமார், முக்குலத்தோர் தேசிய கழகத் தலைவர் எஸ் பி ராஜா, முக்குலத்தோர் தேசிய கழக மாநில அவைத் தலைவர் பூவை பொன்னுசாமி தேவர், வீரகுல அமரன் இயக்கத் தலைவர் கி ரா முருகன் உள்பட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தலைவர்கள் பிரமுகர்கள் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

# முதலமைச்சர் கோப்பை கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம், சான்றிதழ்



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ராணிப்பேட்டை மாவட்டப்பிரிவு சார்பில், முதலமைச்சர் கோப்பை 2026 விளையாட்டுப் போட்டிகளில் அரசு ஊழியர்கள் பிரிவில் நடைபெற்ற கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆட்சியர் திருமதி ந.பிரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, கபடி போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு. ஞானசேகரன் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை மேட்டுப்பாளையம் சாலை துடியலூரில்

# இதயத்திற்காக இதயத்தில் இருந்து என அவேரா இதய மருத்துவமனை கோவையில் முதல் முறையாக வரும் அக்டோபர் 4ம் தேதி திறக்கப்பட உள்ளது




கோவை மாநகரில் இதய நோய்களுக்கான பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட அவேரா இதய மருத்துவமனை, வரும் அக்டோபர் நான்காம் தேதி திறக்கப்பட உள்ளது. இந்த மருத்துவமனை மூலமாக இதய நோய்களுக்கான முழுமையான சிகிச்சை அளிக்கப்பட உள்ளதாக, அவேரா மருத்துவமனையின், தலைமை மருத்துவர் ராஜ்பால் அபைசந்த், மற்றும் டாக்டர் சந்திரசேகர், ஆகியோர் தெரிவித்துள்ளனர். மேலும் செய்தியாளர்களை சந்தித்து பேசிய மருத்துவர்கள் சந்திரசேகர், கூறியதாவது இதயத்திற்காக இதயத்தில் இருந்து என்றதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த இதய நோய் மருத்துவமனை திறக்கபட உள்ளது. இங்கு, நிபுணத்துவம் வாய்ந்த, மேம்பட்ட தொழில்நுட்பம், மற்றும் ஒருங்கிணைந்த சிகிச்சை ஆகியவற்றை ஒரே கூரையின் கீழ், கொண்டு வரும் நோக்கத்தில் அவேரா இதய மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு மருத்துவமனையின் தனித்துவம், நேர்மை, நம்பிக்கை, மருத்துவ சிறப்பு துல்லிய தொழில்நுட்பம், மற்றும் கருணையான கவனிப்பு ஆகியவற்றை வலியுறுத்துகிறதாக தெரிவித்தனர். இம்மருத்துவமனையில் நூறு படுக்கையறைகள் கொண்ட மருத்துவமனை யாகவும், இதயம் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இதன் உள்கட்டமைப்பில் இரண்டு பிலிப்ஸ் அஸூரியன் செவன் சீரிஸ் கேத் லேப்கள், இரண்டு உலகத்திலும் வாய்ந்த கெட்டிங்கே மாடுலர்அறுவைசிகிச்சை அரங்குகள், 18 படுக்கைகள் கொண்ட இதய பராமரிப்பு பிரிவு, 16 படுக்கைகள் கொண்ட இதய மார்பக அறுவை சிகிச்சைக்கு பிந்தைய பிரிவு, மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒருங்கிணைந்த படமெடுக்கும் தொழில்நுட்பத்துடன் கூடிய, பிலிப்ஸ் இன்சிசிவ் கார்டியாக் சிடி ஆகியவை அடங்கும் என்று தெரிவித்தனர். மேலும், இம்மருத்துவமனையில், இதயவியல், இதய மார்பக அறுவை சிகிச்சை, மயக்கவியல், தீவிர சிகிச்சை பிரிவு, மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, கதிரியக்கவியல், மற்றும் நுரையீரல் மருத்துவம் ஆகிய துறைகளின் சேவைகளை வழங்கும் எனவும், இவற்றுக்கு சிறுநீரகவியல், நரம்பியல், நாளமில்லா சுரப்பியில், பொது மருத்துவம், மற்றும் தோல் மருத்துவம், உள்ளிட்ட கூடுதல் சிறப்பு துறைகளும் உள்ளதாக தெரிவித்தனர். வார 7 நாட்களும், 24 மணி நேரமும் மருத்துவ சேவைகள், ஆம்புலன்ஸ் சேவைகள், மற்றும் மேம்பட்ட இதய மார்பக அறுவை சிகிச்சைகள் கிடைக்கும் என்றும் தெரிவித்தனர். மேலும், இந்த மருத்துவமனையை அக்டோபர் நான்காம் தேதி பண்ணாரி அம்மன் குழுமத்தின் தலைவர் எஸ் பி பாலசுப்ரமணியம் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு, ரிப்பன் வெட்டி திறந்து வைக்க உள்ளதாக தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதியில் வருகின்ற ஆறாம் தேதி நடைபெற உள்ள சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் தமிழக வெற்றி கழக வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள் சிறுகுளத்தூர் சிலாவட்டம் பாக்கம் வயலூர் தாதங்குப்பம் புலிகொரடு வசந்தவாடி வில்வராயநல்லூர் முதுகரைல ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு அப்போது புலி கொரடு என்ற இடத்தில் வாக்கு சேகரிக்கும் போது நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இந்த பகுதிக்கு ரேஷன் கடை அமைத்துக் கொடுத்துள்ளேன் எனவே எனக்கு விசில் சின்னத்தில் வாக்களியுங்கள் என கூறி வாக்கு சேகரித்தார் இதில் மதசார்பற்ற சமூகநீதி வெற்றி கூட்டனி கட்சி நிர்வாகிகள் விசிக காங்கிரஸ் மதிமுக ஐஎம்யூஎல் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கான சிறப்பு முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (30.09.2026) துவக்கி வைத்து, பார்வையிட்டார். உடன் ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.



தூய்மைப்பணியாளர்களுக்கான & ஈரோடு மாவட்டம், அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கான சிறப்பு முகாமில் தற்காலிக தூய்மைப்பணியாளர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்டஆட்சித்தலைவர்ச.கந்தசாமி நேற்று (30.09.2026) வழங்கினார். உடன் ஈரோடு மாநகராட்சி மேயர் சு.நாகரத்தினம் சுப்பிரமணியம், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், மாவட்ட மேலாளர் (தாட்கோ) சீ.முருகவேல் உட்பட பலர் உள்ளனர்.

# பணியாளர்கள் சரியாகப் பணியாற்றாவிட்டால் மக்களைத் திரட்டிக் கண்டிக்கலாம்

## தூத்துக்குடி மாநகராட்சிக் கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பேச்சு



தூத்துக்குடி மாநகராட்சிக் கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா,துணைமேயர், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் கோடை காலம் போன்ற தற்போதைய சூழலிலும் மாநகரப் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை ஏதுமின்றி சீராக விநியோகிக்கப்பட்டு வருகிறது. தசரா பண்டிகைக்குப் பிறகு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என மேயர் கேட்டுக்கொண்டார். மேலும், கடந்த 55 மாதங்களாக உறுப்பினர்களின் ஒத்துழைப்போடு வளர்ச்சிப் பணிகள்சிறப்பாகநடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

கடந்த பிப்ரவரி மாதம் முதல் மாநகராட்சியில் இருந்து பத்திரப் பதிவிற்கான 'எல்லார் காப்பி' வழங்கப்படாத நிலையிலும், பத்திரப் பதிவுகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக திமுக உறுப்பினர் கனகராஜ் குற்றம்சாட்டினார். இதுகுறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடனும் உஷாராகவும் இருக்க வேண்டும் என மேயர் கேட்டுக்கொண்டார்.

மேலும் தெருக்களில் உள்ள சாக்கடைக் கான்கள் சரிவர சுத்தம் செய்யப்படுவதில்லை என்றும், தூய்மைப் பணியாளர்களின் செயல்பாடு திருப்திகரமாக இல்லை என்றும் திமுக உறுப்பினர்கள் சுரேஷ்குமார், ரெக்ஸிலின் மற்றும் கம்யூனிஸ்ட் உறுப்பினர் தனலட்சுமி உள்ளிட்டோர் குற்றம்சாட்டினர்.

இதற்குப் பதிலளித்த மாநகராட்சி ஆணையாளர் பிரியங்கா மற்றும் சுகாதார அலுவலர் ஹரிகணேஷ், "பொதுமக்கள் தான் குப்பைகளை மக்கும், மக்காத குப்பை எனப் பிரித்துக் கொடுக்க வேண்டும்" எனக் கூறியதால், மாமன்ற உறுப்பினர்களுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே கடும் காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதத்தைத் தொடர்ந்து பேசிய மேயர் ஜெகன் பெரியசாமி, "மாநகராட்சி ஊழியர்களும் அலுவலர்களும் தங்களது பணிகளை ஒழுங்காகச் செய்யாவிட்டால், மக்களைத் திரட்டி அவர்களைக் கண்டிக்கும் உரிமையை நான்உங்களுக்கு(உறுப்பினர்களுக்கு) வழங்குகிறேன்" என்று அதிரடியாகத் தெரிவித்தார்.

# தூத்துக்குடியில் புனித மிக்கேல் அதிதூதர் கெபி 46வது ஆண்டு திருவிழா:

## மாபெரும் அன்னதானத்தில் 5,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



தூத்துக்குடி ஜார்ஜ் ரோடு, இந்திராநகர் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள புனித மிக்கேல் அதிதூதர் கெபியின் ஆண்டு திருவிழா பக்தி சிறப்புடன் நடைபெற்றது. திருவிழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு வழிபாடுகள் மற்றும் மாபெரும் அன்னதானத்தில் 5,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கடந்த செப்டம்பர் 19-ஆம் தேதி ஜெபமாலையுடன் திருவிழா தொடங்கியது. தொடர்ந்து உதவி பங்குத்தந்தை அருட்பணி.ஜெரி தலைமையில் திருக்கொடியேற்றம் நடைபெற்றதுடன், சிறப்புத் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. விழா நாட்களில்தினந்தோறும் மாலை ஜெபமாலை மற்றும் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக செப்டம்பர் 28-ஆம் தேதி மாலை, அருட்பணி. செல்வம் தலைமையில் சிறப்பு நற்கருணை ஆராதனை நடைபெற்றது. பாத்திமா நகர் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி சார்லஸ் முன்னிலையில் நடைபெற்ற இந்த ஆராதனையில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபட்டனர்.

திருவிழாவின் முக்கிய நிகழ்வாக மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. பாத்திமா நகர் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி சார்லஸ் மற்றும் தூத்துக்குடி மாநகர மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் P.செல்வம் ஆகியோர் அன்னதானத்தை தொடங்கி வைத்தனர்.

இதில் 5,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு அன்னதானம் பெற்றனர். அன்னதான நிகழ்வில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் பங்கேற்றனர்.

திருவிழா ஏற்பாடுகளை பங்குத்தந்தை அருட்பணி. அந்தோணி சார்லஸ், உதவி பங்குத்தந்தை அருட்பணி.ஜெரி, தூத்துக்குடி மாநகர மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் P.செல்வம், அருட்சகோதரிகள், புனித மிக்கேல் அதிதூதர் கெபி குழுவினர், மகளிர் மற்றும் இந்திராநகர் பகுதி இறைமக்கள் இணைந்து செய்திருந்தனர்.

திருவிழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு வழிபாடுகள், நற்கருணை ஆராதனை மற்றும் அன்னதானத்தில் ஏராளமானோர் பங்கேற்றதால் இந்திராநகர் பகுதி முழுவதும் விழா கோலமாக இருந்தது.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாநகர மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் P.செல்வம் இணை அமைப்பாளர் A.ஜால்வின் CK.ஜூடு, எடிசன், M.வால்டர், R. ராஜா, மிக்கேல்சன், பிரதீபா, அநன்யா மேரி, சாரா, மற்றும் கோவில் நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# Why should only women be held responsible for their safety?: Delhi CM Rekha Gupta

*Delhi chief minister Rekha Gupta on Wednesday said ensuring women's safety cannot be reduced to imposing restrictions on girls and called for greater focus on the behaviour and upbringing of boys, while stressing the responsibility of police, civic agencies and courts to make the capital safer.*

*Addressing the diamond jubilee function of Maitreyi College, Gupta said recent incidents involving sexual violence and harassment had once again raised questions about women's safety in the city. In Delhi, we frequently hear of incidents that cast doubt on the safety and security of girls. In such situations, families and society often talk about imposing restrictions. But why only on girls? What about the boys?" Gupta said. This comes as the police stepped up their probe into the alleged gang rape of the minor at gunpoint inside the 142-acre Aastha*



*Kunj Park near Kalkaji Temple on September 21. The class 7 girl was visiting the park with a 17-year-old male friend on her 17th birthday when the crime took place at around 7.15pm-7.30pm. "I believe that our Prime Minister is the only leader who, back in 2014, spoke from the ramparts of the Red Fort and asked: 'You keep lecturing girls, but when will you talk to the boys? When will you counsel the boys?' It shouldn't even need to be said that no means no," Gupta said.*



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், இந்திய அரசின் அலிம்கோ (ALIMCO Bangalore) நிறுவனத்தின் மூலம் ஏடிஐபி திட்டத்தின் கீழ் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்களை நேற்று (30.09.2026) வழங்கினார்கள். உடன் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ச.சங்கர்கணேஷ், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பயிற்சி) ம.பிரசாந்த், (இளநிலை மேலாளர், அலிம்கோ, சென்னை) ரிஷப் மெஹ்ரோத்ரா உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடியில் சாக்கடை உடைப்பு, குடிநீர் வீணாதல், சாலையோர மின்கம்பங்கள்:

## மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையரிடம் 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். சந்திரபோஸ் மனு!



தூத்துக்குடி மாநகராட்சி 34-வது வார்டுக்குட்பட்ட பகுதிகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள், குடிநீர் வீணாதல் மற்றும் போக்குவரத்து இடையூறுகளை உடனடியாக சரிசெய்யக் கோரி, 34-வது வார்டு மாமன்ற உறுப்பினரும், பணி நியமனக்குழு உறுப்பினருமான எஸ். சந்திரபோஸ், மாநகராட்சி மேயர் மற்றும் ஆணையரிடம் மனு அளித்துள்ளார்.

மனுவில், ராஜீவ் நகர் இரட்டைப்பாலம் அருகே பக்கிள் ஓடைக்குச் செல்லும் வடிகாலில் உடைப்பு ஏற்பட்டுள்ளதால் கனரக வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், ஆசிரியர் காலனி சந்திப்பு அருகே பக்கிள் ஓடை பகுதியில் வடிகாலின் மீது கான்கிரீட் மூடி இல்லாததால் விபத்து அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆசிரியர் காலனி - சின்னமணி நகர் சந்திப்பில் உள்ள குடிநீர் வால்வ் தொட்டி மீது கனரக வாகனங்கள் ஏறியதால் சேதமடைந்துள்ளதாகவும், இதுகுறித்து கடந்த 10 மாதங்களாக புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அதனை உடனடியாக சீரமைக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதனால் 34-வது வார்டுக்குட்பட்ட தபால்தந்தி காலனி, ஆசிரியர் காலனி, 3-ம் மைல் மற்றும் சின்னமணி நகர் உள்ளிட்ட பகுதிகளில் 5 இடங்களில் குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருவதாகவும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குடிநீர் வீணாவதைத் தடுக்க குழாய் உடைப்புகளை உடனடியாக சரிசெய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், தேவகி நகரில் பக்கிள் ஓடையிலிருந்து அகற்றப்பட்ட பழைய மின்கம்பங்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் பொதுமக்கள் மற்றும் கனரக வாகனப் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுவதுடன் விபத்து அபாயமும் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, சாலையில் கிடக்கும் மின்கம்பங்களை உடனடியாக அப்புறப்படுத்தி, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என மாமன்ற உறுப்பினர் எஸ். சந்திரபோஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஆகையால் பொதுமக்களின் நலன் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகள் மீதும் மாநகராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சிவகங்கையில் நூதனங்களோடு நடைபெற்ற விவசாயிகள் கூட்டம்



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று புதன்கிழமை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் அரசு அனைத்துத் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் இடையிடையே சில விவசாயிகள் தங்கள் பிரச்சனை குறித்து நூதனங்களோடு வந்து மனுவும் கொடுத்தனர். அப்போது சில விவசாயிகள் கண்ணில் கருப்புத் துணியை கட்டிக்கொண்டு மாவட்ட ஆட்சியரிடம் மனுக் கொடுத்தனர். அந்த மனுவில் காளையார்கோவில் யூனியன் முத்தூர் அஞ்சல் விரகடி கடம்பன்குளம் கிராமத்தில் ஒரு தனியார் சோலார் மின்சாரம் தயாரிக்கும் நிறுவனமானது அரசு அனுமதி பெறாமல் 12 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் திறந்தவெளி கிணறுகளை அமைத்து நாள் ஒன்றுக்கு 30 ஆயிரம் லிட்டருக்கு மேல் தண்ணீரை எடுத்து மின்சாரம் தயாரிக்க பயன்படுத்துவதால் அந்தப் பகுதி முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது என்றும் சோலார் மின்சாரம் போட்ட இடத்தில் மழைநீர் தடுக்கப்பட்டு கண்மாய்க்கு தண்ணீர் வரவில்லை என்றும் இந்த நிறுவனத்திற்கு மின்சாரம் பெற்றதில் விதிமீறல்கள் இருக்கிறது. எனவே இந்த தனியார் நிறுவனத்தின் மீது உரிய நடவடிக்கை எடுத்து அதன் அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர். இதன் பிறகு மதுரை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் கோபால் என்பவர் தலையில் சிறிய மூட்டையும் கழுத்தில் அம்பேத்கர் படத்தையும் தொங்கவிட்டவாறு கூட்டத்திலிருந்து எழுந்து நடந்து வந்தார். பின்பு அவர் மாவட்ட ஆட்சியரைப் பார்த்து திருப்புவனம் யூனியனில் பனையரேந்தல் உலகனேந்தல் கண்மாய்கள் கடந்த 60 ஆண்டுகளாக தூர்வாரப்படவில்லை. எனவே இந்தக் கண்மாய்களுக்கு முன்னுரிமை கொடுத்து தூர் வார வேண்டும் என்று கேட்டுக் கொண்டவாறு வெளியில் சென்று விட்டார். அப்போது செய்தியாளர்கள் அவரைச் சந்தித்து தலையில் இருக்கும் மூட்டை என்ன? என்று கேட்டபோது....இது இதுவரை நான் கொடுத்த மொத்த மனுக்களின் கட்டு என்றும் கழுத்தில் தொங்கும் அம்பேத்கர் படமானது நான் சட்டம் படிக்க வழிகாட்டியவர் என்றும் கூறினார்.

இதனைத் தொடர்ந்து விவசாயிகள் தங்கள் பகுதிகளில் உள்ள பிரச்சனைகள் குறித்துப் பேசினார்கள். அதற்கு மாவட்ட ஆட்சியரும் துறை அதிகாரிகளும் பதில் கூறினார்கள்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.